தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 17 மடல் 7 ஜூலை – 2017 ₹1.00

## தானுவாஸ் ‘கேபிஎம் கோல்டு பன்றி’ வெளியீடு



இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவியில் பன்றி குறித்த அனைத்திந்திய இணைப்பு ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாட்டின் உள்ளூர் வேளாண் பருவநிலைக்கு ஏற்றதும் அதிக நோய் எதிர்ப்புச் சக்தியும் 3 விழுக்காட்டிற்கும் குறைவான குட்டியிறப்பு விகிதத்தையும் கொண்டதுமான தானுவாஸ் கேபிஎம் கோல்டு என்ற கலப்பினப் பன்றி ரகம் உருவாக்கப்பட்டது. இதற்கான வெளியீட்டு விழா 30.06.2017அன்று கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தமிழகக் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் பங்கேற்று, தானுவாஸ் கேபிஎம் கோல்டு கலப்பினப் பன்றி ரகத்தை வெளியிட்டு, பன்றிக்குட்டிகளைப் பண்ணையாளர்களுக்கு வழங்கினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் “பன்றி குறித்த அனைத்திந்திய இணைப்பு ஆராய்ச்சித் திட்டம்” பற்றிய தனியிதழை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றி ஒருங்கிணைந்த பண்ணை வளர்ப்புப் பிரிவைத் (பன்றி + வாத்து + மீன்) துவக்கிவைத்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கால்நடை அறிவியல்) முனைவர் ஜோய் கிருஷ்ண ஜெனா அவர்கள் பன்றிப் பராமரிப்புக்கான மென்பொருளை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றி, புதிய பன்றிக் கொட்டகையைத் திறந்து வைத்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் உதவித் தலைமை இயக்குநர் (கால்நடை உற்பத்தி மற்றும் இனப்பெருக்கம்) முனைவர் ஆர்.எஸ். காந்தி அவர்கள் “செம்மறியாடு மேம்பாடு, காட்டுப்பாக்கம் பிரிவு” குறித்த இணைப்பு ஆராய்ச்சித் திட்டத்தின் சாதனைகளை வெளியிட்டு, பன்றி இனப்பெருக்கப் பிரிவில் கழிவுநீர் சுத்திகரிப்பு மையத்தைத் துவக்கிவைத்து உரையாற்றினார். அசாம், கவுகாத்தியிலுள்ள பன்றிக்கான தேசிய ஆராய்ச்சி மைய இயக்குநர் முனைவர் டி.கே. சர்மா அவர்கள் தானுவாஸ் கேபிஎம் கோல்டு பன்றி ரகம் பற்றிய மடிப்பிதழை வெளியிட்டு உரையாற்றினார். திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் த. பாலசுப்ரமணியம் அவர்கள் தானுவாஸ் கேபிஎம் கோல்டு பன்றி ரகத்தின் சிறப்பினை எடுத்துரைத்தார். முன்னதாகப் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவண குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஹ. கோபி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். விழாவில் பல்கலைக்கழகப் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையமும், ஊட்டச்சத்தியல் நிலையமும் தங்களின் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தன.

## உலகளாவிய சிகிச்சையியல் கருத்தரங்கு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள சிகிச்சைத் துறைகள் சார்பாக “பெரிய மற்றும் சிறிய பிராணிகளின் சிகிச்சையில் நவீன உத்திகள்” என்ற உலகளாவிய கருத்தரங்கு 22.06.2017 மற்றும் 23.06.2017ஆம் நாள்களில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கருத்தரங்கில் பங்கேற்று, குத்து விளக்கேற்றிக் கருத்தரங்கைத் துவக்கிவைத்துக் கருத்தரங்கக் கையேட்டினை வெளியிட்டார். அவர் தமது சிறப்புரையில் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டில் களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் அளிக்கும் சிகிச்சையியல் சேவைகளை விரிவாக எடுத்துரைத்தார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் இல. குணசீலன், நாமக்கல் தங்கம் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் ஆர். குழந்தைவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, கருத்தரங்கச் செயலாளர் மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் முனைவர் ம. செல்வராஜு அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆர். இசக்கியல் நெப்போலியன் அவர்கள் நன்றியுரை நல்கினார். கருத்தரங்கில் மஸ்கட், ஓமன், உத்திரபிரதேசம், குஜராத், கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த மொத்தம் 29 களப்பணிக் கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். கருத்தரங்கானது வகுப்பறைப் பயிற்சி, செயல்முறைப்



பயிற்சி மற்றும் விவாதங்கள் எனப் பல கட்டங்களாக நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் "நோய்கண்டறிதல் இமேஜிங் தொழில்நுட்பத்தில் அண்மைக்கால முன்னேற்றங்கள்" குறித்து விரிவுரை ஆற்றினார். அமெரிக்காவில் உள்ள ஒக்லகாமா பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் லியோனல்தாசன் அவர்கள் கலந்துகொண்டு கால்நடை மருத்துவர்களுக்குக் களப்பணிகளுக்கு உதவும் குறிப்புகளை வழங்கினார். 23.06.2017அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவில் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் (பொ.) முனைவர் கு.அ. பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமை வகித்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாகக் கருத்தரங்க அமைப்புச் செயலாளர் மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் முனைவர் ம. செல்வராஜு அவர்கள் நன்றியுரை நல்கினார்.

## விவசாயிகளுக்கான கருத்துப்பட்டறை



தமிழகத்தின் வடமேற்கு வேளாண் மண்டலத்தில் உள்ள கிருஷ்ணகிரி, வேலூர், தர்மபுரி மற்றும் சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையம்மூலம் "கால்நடைப் பண்ணையத்தில் மேலாண்மைக் குறைபாடுகளும் அவற்றிற்கான தீர்வுகளும்" குறித்த விவசாயிகளுக்கான கருத்துப் பட்டறை 07.06.2017அன்று கிருஷ்ணகிரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்துப் பட்டறையைத் துவக்கிவைத்து, கால்நடைப் பண்ணையத்தில் மேலாண்மைக் குறைபாடுகளும் அவற்றிற்கான தீர்வுகளும் என்ற புத்தகத்தை வெளியிட்டு, விவசாயிகளின் பல்வேறு வகையான செயல்பாடுகளை விளக்கமாக எடுத்துரைத்தார். பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, பண்ணைய மேலாண்மையில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களின் அளப்பரிய சேவையையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்திப் பேசினார். தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் பொது மேலாளர் திரு. எஸ். செல்வக்குமார், கால்நடைப் பராமரிப்புத் துறையின் கிருஷ்ணகிரி மண்டல இணை இயக்குநர் மருத்துவர் டி. சுப்பிரமணி, யூனியன் பேங்க் ஆப் இந்தியாவின் மண்டல மேலாளர் திரு. புல்லா ராவ், நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திருமதி. நஸ்ரின் சலீம் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முன்னதாக, கிருஷ்ணகிரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மு. முருகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. அருணாச்சலம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மொத்தம் 350 விவசாயிகள் கருத்துப் பட்டறையில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## இடுபொருள் வழங்கல்

ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவி பெற்ற "கால்நடை மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்புமூலம் தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தின் கொல்லிமலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்" குறித்த திட்டப் பயனாளிகளுக்கு இடுபொருள் வழங்கல் நிகழ்ச்சி 08.06.2017அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, திட்டத்தின் மூலம் பயிற்சிபெற்ற 500 மலைவாழ் மக்கள் மற்றும் சிறந்த விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி, மடிப்பிதழ் வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் கு. மணி, விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். சேந்தமங்கலம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்



வாழ்த்துரை வழங்கினார். திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் பேராசிரியர் முனைவர் து. கண்ணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இணை ஆராய்ச்சியாளர் மற்றும் தலைவாசல், கோழியின நோய் ஆய்வகத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செ. சரவணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் "காலநிலை மாறுபாடுகளுக்கு ஏற்ப வெள்ளாடு மற்றும் செம்மறியாடு உற்பத்தித் தொழில்நுட்பங்கள்" பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் 06.06.2017 முதல் 08.06.2017 வரை நடத்தப்பட்டன. கரூர், நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. பரமேஸ்குமார் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 60 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## பயிற்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறைமூலம் "தருமபுரி மாவட்டத்தின் பாலக்கோடு மற்றும் பென்னாகரம் வட்டங்களில் எருமைகளில் இனப்பெருக்கத்திறனை அதிகரிக்கச் சினைப் பருவத் தூண்டுதல் மற்றும் ஒருங்கிணைப்புத் தொழில்நுட்பம்" குறித்த மாநிலச் சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் மாநிலத் திட்டக் குழுவின் நிதியுதவியில் "எருமைகளில் மலட்டுத்தன்மைப் பராமரிப்பு" குறித்த மூன்று நாள் பயிற்சி, தருமபுரி மாவட்டத்தின் 10 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு 28.06.2017 முதல் 30.06.2017வரை அளிக்கப்பட்டது. பயிற்சியின் நிறைவு நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை வகித்துப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார்.
- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகத் தொழில்முனைவோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் "நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி" 22.05.2017

முதல் 02.06.2017 வரை நடைபெற்றது. இதில் 15 பண்ணை மகளிர் உட்பட மொத்தம் 30 பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பயிற்சியின் நிறைவில் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

- காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம்மூலம் பெங்களூர், மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிதியுதவியில் ''கோழி வளர்ப்பு'' குறித்த ஆறு நாள் தொழில்முனைவோர் பயிற்சி 26.06.2017 முதல் 01.07.2017வரை நடைபெற்றது. பயிற்சியில் 46 பண்ணையாளர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு நிகழ்ச்சியில் மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஆலோசகர் மருத்துவர் வி. கிருஷ்ணன் அவர்கள் ''தேசியக் கால்நடை இலக்கு'' குறித்துச் சிறப்புரையாற்றிப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.
- தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் மருக்காரம்பட்டி, எர்ரனஅள்ளி கிராமங்களில் முறையே 47 மற்றும் 13 புது வாழ்வுத் திட்டப் பயனாளிகளுக்கு ''நாட்டுக் கோழி வளர்ப்பு'' குறித்த பயிற்சி 02.06.2017 மற்றும் 22.06.2017ஆம் நாள்களில் அளிக்கப்பட்டது. மேலும், ''எருமைகளில் சினைப்பருவ ஒருங்கிணைப்பு'' குறித்த தொழில்நுட்பக் கருத்தரங்கு 08.06.2017அன்று நடத்தப்பட்டது. கருத்தரங்கில் தருமபுரி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் 57 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

### கால்நடை மருத்துவ முகாம்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவும் அண்ணா பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுகள் (II மற்றும் IV) மற்றும் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து திருவள்ளூர் மாவட்டத்தின் சிறுவாபுரி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தின் வல்லக்கோட்டை மற்றும் காயர் கிராமங்களில் முறையே 17.06.2017, 18.06.2017 மற்றும் 26.06.2017ஆம் நாள்களில் 'கால்நடை மருத்துவ முகாமை' நடத்தின. முகாமில் 281 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது மற்றும் 86 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ''பயனுள்ள வகையில் நூலகப் பயன்பாடு'' குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 12.06.2017அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். கோயம்புத்தூர், பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியின் நூலகர் திரு. ஜெ. ஆறுமுகம் அவர்கள் ''பயனுள்ள வகையில் நூலகப் பயன்பாடு'' குறித்து உரையாற்றினார். நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

### மரக்கன்று நடுதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகமும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியும் இணைந்து மாபெரும் அளவில் மரக்கன்று நடுதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாதவரம், மாநாட்டுக் கட்டட வளாகத்தில் 14.06.2017 அன்று நடத்தின. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து, 2016–2017ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த முதலாமாண்டு மாணவர்களுக்கு மரக் கன்றுகள் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் ''ஒரு மாணவர் ஒரு மரம்'' என்ற கருத்திற்குப் புதுதில்லி, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (யுஜிசி) வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை விளக்கிப் பேசினார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பணியாளர்கள் பங்கேற்றனர்.

### உலகச் சுற்றுச்சூழல் நாள் –2017

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மரக் கன்று நடும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து ''உலகச் சுற்றுச்சூழல் நாள்'' 05.06.2017அன்று கடைப்பிடிக்கப்பட்டது. கால்நடை நுண்ணுயிரியியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஷ்வர் அவர்கள் கல்லூரி வளாகத்தில் மரக்கன்று நட்டு நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார்.

### உலக யோகா தினம்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி; நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; ஓசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் 21.06.2017அன்று உலக யோகா தினம் கடைப்பிடிக்கப்பட்டது. தேசிய மாணவர் படை மற்றும் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் யோகா வல்லுநர் வழிகாட்டுதலில் பல்வேறு யோகாப் பயிற்சிகளைச் செய்தனர். தத்தம் கல்லூரி முதல்வர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

### விருதுகள்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பி.வி.எஸ்சி. & ஏ.எச். நான்காம் ஆண்டு மாணவி செல்வி ஆர். ஹேமசாயி, பெங்களூரு நேச்சுரல் ரெமடிஸ் நடத்திய ''பைட்டோ கெமிக்கல்கள் பயன்பாட்டினால் கால்நடைச் சிகிச்சையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்'' என்ற தேசிய அளவிலான நேச்சுரல் விங்ஸ் கட்டுரைப் போட்டியில் பங்கேற்றுத் தேசிய அளவில் மூன்றாம் இடம் பெற்றார். கல்லூரியின் எம்.வி.எஸ்சி. இரண்டாம் ஆண்டு மாணவி பி. கனிமொழி ஆறுதல் பரிசு பெற்றார். மேலும், கல்லூரியின் பி.வி.எஸ்சி. & ஏ.எச். இரண்டாம் ஆண்டு மாணவன் செல்வன் ஆர். ருத்ரகுமார் நாமக்கல் தமிழ்ச் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில் மூன்றாம் இடம் பிடித்து, பண முடிப்பு ரூபாய் 1000/– பெற்றார்.

### கட்டுரைப் போட்டி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் துறையானது கல்லூரியின் தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக ''தூய்மை இந்தியா'' என்ற தலைப்பில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்குத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதுதல் போட்டியை 24.06.2017அன்று நடத்தியது. போட்டியில் 42 மாணவர்கள் பங்கேற்றனர். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் 05.07.2017அன்று பரிசுகள் வழங்கினார்.

### தேசிய மாணவர் படைப் பணி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் (டிஎன்) ஆர் மற்றும் வி தேசிய மாணவர் படையின் 17 மாணவிகள் 02.07.2017அன்று நடைபெற்ற 'பிங்கதான் சென்னை 2017'இல் பங்கேற்றனர். தேசிய மாணவர் படையின் இணை அலுவலர் மருத்துவர் ஆர். பாலமுருகன் மற்றும் (டிஎன்) ஆர் மற்றும் வி தேசிய மாணவர் படை அலுவலர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 29.07.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## பணி ஒய்வு



கிருஷ்ணகிரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மு. முருகன் அவர்கள் 30.06.2017அன்று பணி ஒய்வு பெற்றார். 02.06.1957இல் பிறந்த இவர், 35 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் ஓட்டுநர் திரு. ஜெ. எட்வின் ஞானசேகரன் அவர்கள் 30.06.2017அன்று பணி ஒய்வு பெற்றார். 28.06.1959இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலக ஓட்டுநர்(முதுநிலை) திரு. ஆர். பெருமாள் அவர்கள் 30.06.2017அன்று பணி ஒய்வு பெற்றார். 14.06.1959இல் பிறந்த இவர், 21 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் துறையின் (பால்வள அறிவியல்) திறனறி பணியாளர் (சிறப்பு நிலை) திருமதி. ஜி. சரோஜா அவர்கள் 30.06.2017அன்று பணி ஒய்வு பெற்றார். 30.06.1957இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 12 மாதமும் பணியாற்றியுள்ளார்.



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகத்தின் திறனறி பணியாளர் திருமதி ஜெ. ஜெயலட்சுமி அவர்கள் 30.06.2017அன்று பணி ஒய்வு பெற்றார். 01.07.1957இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலகவியல் துறையின் திறனறி பணியாளர் (சிறப்பு நிலை) திருமதி. டி.என். சுலைகா பீ அவர்கள் 30.06.2017அன்று பணி ஒய்வு பெற்றார். 10.06.1957இல் பிறந்த இவர், 26 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## அறிவிப்புகள்

### "சுகாதாரமான கோழியிறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பு" தொடர்பான தொழில்நுட்பம் சார்ந்த தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

| | | |
|---|---|---|
| நிதியுதவி | : | குஜராத்திலுள்ள இந்திய அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிலையம் மற்றும் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொழில் முனைவோர் மேம்பாட்டு வாரியம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய அரசு. |
| ஒருங்கிணைப்பு | : | கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்–641035. |
| பயிற்சிக் காலம் | : | செப்டம்பர் 2017 முதல் நவம்பர் 2017 வரை (ஆறு வாரங்கள்). |
| வயது | : | 18 – 40 வயதிற்குள். |
| கல்வித் தகுதி | : | அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம் சார்ந்த பட்டம் பெற்ற பட்டதாரிகள் அல்லது பட்டயம் பெற்றவர்கள். |
| தேர்வு முறை | : | விண்ணப்பம், எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல். |

**பயிற்சி நடைபெறும் இடம் மற்றும் தொடர்புக்கு**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
எண் 63, காளப்பட்டிப் பிரிவு, சரவணம்பட்டி, கோயம்புத்தூர்–641 035
தொலைபேசி: 0422–2669965

### முதுநிலைப் பட்டய (தொலைநிலைக் கல்வி – இணையவழி) படிப்பு

2017–2018ஆம் கல்வியாண்டில் கால்நடை மருத்துவ அறிவியல் முதுநிலைப் பட்டய **(தொலைநிலைக் கல்வி – இணையவழி)** படிப்புகளில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் குறிப்பேட்டைப் பல்கலைக்கழக இணையதளம்: **www.tanuvas.ac.in**இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவம் அளிக்க வேண்டிய **கடைசி நாள்: 24.08.2017 மாலை 5.00 மணி.** மேலும் விவரங்களுக்குத் தொடர்புகொள்க: தொலைபேசி: 044–24320411; மின்னஞ்சல் முகவரி: pg_diploma@tanuvas.org.in/dde@tanuvas.org.in.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்